14.03.2023

அசல் வழக்கு எண்: 105/2016

வா.சா.1 சாட்சி ராஜாராம் இன்று நீதிமன்றத்தில் ஆஜராகி பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை

தாவா சொத்துக்களை பொறுத்து 2 மற்றும் 3 வது பிரதிவாதிகள் பெயர் கூட்டுப்பட்டாவில் உள்ளது என்றால் சரிதான். எனது அக்கா 1ம் பிரதிவாதி பாண்டியம்மாள் 2வது மற்றும் 3 வது பிரதிவாதிகளுக்கு ஒரு தானசெட்டில்மெண்ட் எழுதிகொடுத்து அதன் அடிப்படையில் கூட்டுப்பட்டாவில் 2 வது மற்றும் 3வது பிரதிவாதிகள் பெயர் உள்ளது என்றால் சரிதான். கூட்டுப்பட்டாவில் உள்ள பெயர்களை நீக்கம் செய்வதற்கு வருவாய்துறையில் மனு எதுவும் நான் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. ஏற்கனவே மனு கொடுத்து அவர்கள் பெயர் நீக்கப்பட்டது. அதன் பிறகு மீண்டும் பிரதிவாதிகள் சேர்த்துவிட்டார்கள். ஏற்கனவே மனு கொடுத்து நீக்கம் செய்ததாக சொல்வது தவறாக சொல்கிறேன் என்றாலும் அவர்கள் பெயர் நீக்கம் செய்யப்படவில்லை என்றாலும் சரியல்ல. என்னிடம் ஆதாரம் உள்ளது.

தாவா சொத்துக்கள் தானசெட்டில்மெண்டின் அடிப்படையில் 2வது மற்றும் 3வது பிரதிவாதிகளின் அனுபவத்தில் உள்ளது என்றால் சரியல்ல. எனது பெயரில் தனிப்பட்ட முறையில் கிஸ்தி செலுத்தி அதற்கான ரசீதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. தாக்கல் செய்துள்ளேன். 1ம் பிரதிவாதி பாண்டியம்மாள் குடும்ப ஏற்பாட்டின் பெயரில் அவருக்கு கிடைத்த சொத்துக்களை அவரது மகன்களான 2 வது மற்றும் 3வது பிரதிவாதிகளுக்கு தானசெட்டில்மெண்டு மூலமாக எழுதி வைத்துள்ளார் என்றால் சரியல்ல. அதனால் மேற்படி பத்திரம் செல்லக்கூடியது என்றால் சரியல்ல. மேற்படி விபரங்களை மறைத்து

தவறானமுறையில் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் கேட்டுள்ள விளம்புகை பரிகாரம் எனக்கு கிடைக்கதக்கதல்ல என்றால சரியல்ல. தவறான வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் அதனால் இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றாலும் சரியல்ல.